(இ) 1971-72-ம் ஆண்டில் மார்ச் மாதம் 25 சதவீதம் மானியத் தொகையாக 12 மாட்டுக் கொட்டகைகளுக்குத் தலா ரூ. 75 வீதமும் ஒரு மாட்டுக் கொட்டகைக்கு ரூ. 100-ம் ஆக மொத்தம் ரூ. 1,000 அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி உதவித்தொகை 1971-72-ஆம் ஆண்டிற்கு முன்பாக அளிக்கப்படவில்லை.

திரு. கே. ஏ. வகாப் : மாட்டுக் கொட்டகைகளுக்கு மானியம் அளித்திருக்கிறோம். ஆனால் மாட்டுக் கொட்டகைகள் அங்கு கட்டப்படவில்லை. அதைச் சரியானமுறையில் நடத்தவேண்டுமென்றால் கால்நடைத் துறை மூலம் மானியம் வழங்க அல்லது அவர்கள் சென்று பார்த்து சர்டிபை செய்யும் விதத்தில் ஒரு ஏற்பாட்டினை வைத்தால் நலமாகயிருக்கும். எனவே அரசு அப்படிச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒன்றியங்களின் கீழ் இருக்கிற கால்நடை அலுவலர்கள், அதிகாரிகள் மேற்பார்வையில் கட்டப்படுகின்றன. வழங்கப்படுகிற தொகை சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்றால் நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒன்றியத்திற்கு உரிமை இருக்கிறது. 'பஞ்சாயத்து யூனியன் அண்டர் ஹனிமல் ஹஸ்பென்ட்ரி' என்று மானியம் வழங்கப்படுகிறது. மானியத்தைச் சரியாக பயன்படுத்தவில்லை என்றால், அந்தக் குறைபாட்டினை ஒன்றிய ஆணையாளரிடம் சொல்வார்களானால் தக்க அதிகாரிகளைக் கொண்டு அதன் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கலாம்.

மாயூரத்தில் காவிரியின் குறுக்கே பாலம் அமைப்பு

* 104. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகரில் காவிரி-முத்தப்பன் காவிரி மீது கட்டப்பட்டிருக்கும் பாலம் சம்பந்தமாகப் போடப்படும் சாலைகளுக்கு வேண்டிய நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் வேலை பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது?

(உ) அதற்கான நஷ்ட ஈட்டுத்தொகை எவ்வளவு அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) 43,072 சதுர அடிகள்.

(உ) ரூ. 8,321.55.

[1973 பிப்ரவரி 10]

திரு. என். கிட்டப்பா : மாயூரத்தில் காவிரியின் குறுக்கே பாலம் கட்ட ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அளிக்கப்பட்ட தொகை, பக்கத்தில், சுற்று வட்டாரத்தில் உள்ள நிலங்களின் தொகை, அந்த நிலங்களுக்குள்ள பெருமானத் தொகையை விட மிகக் குறைவான தொகையாக இருப்பதால் நிலத்தைக் கொடுத்தவர்கள் சர்க்கார் கொடுக்கிற அந்தப் பணத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? எனவே, அதை மீண்டும் பரிசீலித்து அந்த ஆர்ஜிதத்திற்கான நியாயமான தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் ஆலோசிக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய விருப்பப்படி அவர்களுக்கு வேண்டிய தொகையைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். எனவே, நிலத்தை கையகப்படுத்துகிற அந்த கையக முயற்சியின் அடிப்படையில் வருவாய்த் துறை அதிகாரிகளைக் கொண்டு பக்கத்திலுள்ள நிலங்களின் மதிப்பீடுகளையெல்லாம் கணக்கிட்டு இவற்றிற்கு எவ்வளவு நஷ்டயீடு தருவது என்ற முறையில் கணக்கிட்டுத்தான் அவர்கள் ஒரு கொள்கையை வகுத்திருக்கிறார்கள்—அந்தக் கொள்கைப்படி கொடுக்கப் படுகிறது. அதிகமாக அவர்கள் பெற விரும்புகிறார்கள் என்றாலும், நாம் கையாள்கிற ஒரு முறையிலிருந்து மாறுவதற்கில்லை. கொரநாடு, சித்தக்காடு நிலங்களில் ஈட்டுத் தொகையைப் பகிர்ந்தளிப்பதில் தகராறு இருப்பதால் நஷ்டயீட்டுத் தொகை மாயூரம் கீழ் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றம் விசாரித்து அந்தத் தொகையை அவர்களிடம் கொடுக்க, அதற்கான முயற்சி நீதிமன்றத்தின்முன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கையகப் படுத்துகிற முறை இல்லாமல் பேரம் பேசி வாங்கலாம் என்றால், பேரம் பேசினால் அதிகத் தொகை கேட்கிறார்கள் என்பதற்காகத்தான் நிலத்தைக் கையகப்படுத்துகிற சட்டத்தின் அடிப்படையில் இந்த நிலங்களை நாம் பெறுகிறோம்.

திரு. என். கிட்டப்பா : அந்த நிலத்தை நம் அரசு ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னால் அவர்கள் ஒப்புதல் அளித்து நியாயமாக அவர்களுக்குப் பக்கத்தில் உள்ள நிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய தொகை தங்களுக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நிலத்தைத் தந்த அந்த மக்களுக்கு இன்றையதினம் அந்தத் தொகை கிடைக்காத காரணத்தினால் கொடுக்கப்பட்டுள்ள தொகையை வாங்க மறுக்கிறார்கள். எனவே, இதை மீண்டும் பரிசீலனை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்குக் கொடுக்கப் படுகிற தொகை போதுமானதாக இல்லை என்று கருதினால் அவர்கள் வழக்கு தொடுத்து நீதிமன்றத்தில் அதை விசாரிக்கச் செய்து, நீதிமன்றம் பார்த்து